"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 8

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி - 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3

1. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளின் எண்ணிக்கை
   1. இருநூற்றுப்பதினாறு
   2. இருநூற்றுப்பதினேழு
   3. இருநூற்றுநாற்பத்தேழு

2. இருமுதுகுரவர் எனப் போற்றப்பெறுபவர்
   1. தனயன், ஆசான்
   2. குரு, சீடர்
   3. தாய், தந்தை

3. மாணவர்களுள் சிலர் சித்திரம் வரைவதில் வல்லவர்கள். இதில் சித்திரம் என்பது
   1. ஓவியம்
   2. சிற்பம்
   3. நாடகம்

4. சுவிஸ் கூட்டாட்சி அவையிலுள்ள உறுப்பினர்களின் ஆட்சிக்காலம்
   1. மூன்று ஆண்டுகள்
   2. நான்கு ஆண்டுகள்
   3. ஏழு ஆண்டுகள்

5. ‘உண்மைமிக்க கீரனார் உரை வகுத்த தமிழ்மொழி…’ உண்மை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. வாய்மை
   2. பொய்
   3. வல்லமை

6. காகம் கரையும் அதுபோல ஆந்தை
   1. அலறும்
   2. அகவும்
   3. அலப்பும்

7. அடர்ந்தகாட்டில் இரவில் சென்றவர்க்கு நிலா வழிகாட்டி நின்றது. இதில் நிலா என்பது
   1. திங்கள்
   2. கதிர்
   3. மின்னல்

8. அம்மா பொங்கலை ஏப்பையால் அள்ளிஅள்ளிக் கொடுத்தார். ஏப்பை என்பதன் திருத்தமான வடிவம்
   1. அகைப்பை
   2. அகப்பை
   3. அகப்பைய்

9. காட்டுமல்லிகை ஊரெல்லாம் மலரும் காலம்
   1. கூதிர்காலம்
   2. இளவேனிற்காலம்
   3. கார்காலம்

10. சிறியகால்களால் குழந்தை குறுகுறு என நடந்தது. இதில் குறுகுறு என்பது
    1. அடுக்குமொழி
    2. இணைமொழி
    3. இரட்டைக்கிளவி

1 2 3

11. நானிலங்களில் முல்லை நிலத்துக்குரிய கடவுள்
    1. முருகன்
    2. திருமால்
    3. வருணன்

12. காடு, வனம், அடவி என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
    1. வானகம்
    2. மண்ணகம்
    3. கானகம்

13. ஆண்கள் எட்டுமுழம் அணிந்து விழாக்களுக்குச் செல்வார்கள்.
    இதில் எட்டுமுழம் என்பது
    1. பொருளாகுபெயர்
    2. சினையாகுபெயர்
    3. நீட்டலளவையாகுபெயர்

14. கணக்கிட்டுச் செலவு செய்தல் வேண்டும். இக்கருத்தை விளக்கும் பழமொழி
    1. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
    2. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
    3. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்

15. ‘தண்டலை மயில்களாட….’ இப்பாடல் இடம்பெறும் காவியம்
    1. மணிமேகலை
    2. கம்பராமாயணம்
    3. மகாபாரதம்

16. என் நண்பி மாலதி ஆபத்தில் உதவினாள். இதில் நண்பி என்பது
    1. எதிரி
    2. தோழி
    3. தங்கை

17. சென்றிடுவீர்! எட்டுத்திக்கும் - கலைச்செல்வங்களைக் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!
    இதன் எழுவாய்
    1. நீவிர்
    2. அவர்கள்
    3. நாங்கள்

18. இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாக அமையும் வினைமுற்று
    1. ஏவல்வினைமுற்று
    2. வியங்கோள்வினைமுற்று
    3. எதிர்மறைவினைமுற்று

19. புலம்பெயர் தேசமெங்கும் வாழும் தமிழர்கள் பல்துறைகளிலும் வெற்றிகள் பல
    படைக்கின்றனர். வெற்றி என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. தாழ்வு
    2. தோல்வி
    3. வளர்ச்சி

1 2 3

20. குரங்குக்கு கடுவன் போல மானுக்கு
    1. மறி
    2. கலை
    3. பிணை

21. என்னால் மரம் நடப்பட்டது. இவ்வாக்கியத்தின் செய்வினை வாக்கிய வடிவம்
    1. நான் மரத்தை நடுவேன்.
    2. நான் மரம் நட்டேன்.
    3. நான் மரம் நடுகின்றேன்.

22. முத்தமிழ்க்காப்பியம் எனச் சிறப்பிக்கப்பெறும் நூல்
    1. நளவெண்பா
    2. வளையாபதி
    3. சிலப்பதிகாரம்

23. தலைவர் கூட்டத்தை நடத்துவித்தார். இவ்வாக்கியம்
    1. தன்வினை
    2. பிறவினை
    3. செயப்பாட்டுவினை

24. கலைநிகழ்ச்சி ஒன்றை மேடையேற்றுவதற்கு முன் நிகழ்த்திப் பார்த்தல்
    1. அரங்கேற்றம்
    2. ஒத்திகை
    3. ஒப்படை

25. அந்நகரின் அழகிய இயற்கைக் காட்சிகளைக் கண்டு அவன் களிப்படைந்தான். இதில் வந்துள்ள புறச்சுட்டுச்சொல்
    1. அழகிய
    2. அவன்
    3. அந்நகர்

(25×1=25 புள்ளிகள்)

**2. சேர்த்தெழுதுக.**

1. ஒற்றுமை + உணர்வு = ____________________
2. கல் + சிலை = ____________________
3. மூன்று + தமிழ் = ____________________
4. அரசு + அவை = ____________________
5. பணி + அகம் = ____________________
6. கருமை + பலகை = ____________________

(6×1=6 புள்ளிகள்)

**3. பிரித்தெழுதுக.**

1. தேசத்தொண்டு = ____________ + ____________
2. பாட்டிசை = ____________ + ____________
3. பொருட்பால் = ____________ + ____________
4. கற்பொழுக்கம் = ____________ + ____________
5. தென்மேற்கு = ____________ + ____________
6. கந்தலுடை = ____________ + ____________

(6×1=6 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. 'கற்காமல் இருப்பதைவிடப் பிறக்காமல் இருப்பதே மேல்' எனக் கூறியவர் யார்? 1புள்ளி

   ____________________________________________

2. வெண்பாவுக்கு ஒரு புலவர் எனப் போற்றப்பெறுபவர் யார்? 1புள்ளி

   ____________________________________________

3. ஐரோப்பியருக்குத் திறை கொடுக்க மறுத்து இறுதிவரை போராடிய வன்னிமன்னன் யார்? 1புள்ளி

   ____________________________________________

4. வாக்கிய உறுப்புக்களை எடுத்துக்காட்டுடன் தருக. 1புள்ளி

   ____________________________________________

   ____________________________________________

   ____________________________________________

5. ஏவல்வினை என்றால் என்ன? இதன் வகைகளைத் தருக. (2 புள்ளிகள்)

   ____________________________________________

   ____________________________________________

   ____________________________________________

6. வேற்றுமை என்றால் என்ன? 3ஆம் வேற்றுமையின் உருபுகளைத் தருக. (2புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

7. ஆகுபெயர் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? (2புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

**5. கீழ்க்காணும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியங்கள் எழுதுக.**

1. அலை

பெயர்: ______________________________________________

______________________________________________

வினை: ______________________________________________

______________________________________________

2. படை

பெயர்: ______________________________________________

______________________________________________

வினை: ______________________________________________

______________________________________________

(2×2=4 புள்ளிகள்)

**6. பொருத்தமான சொற்களை வைத்து திருக்குறள்களை நிறைவு செய்க.**

| காமுறுவர் | விழுச்செல்வம் | மாடல்ல | புறக்கண்டு |
|---|---|---|---|

1. தாமின் புறுவ துலகின் ____________________

____________________ கற்றறிந் தார்.

2. கேடில் ____________________ கல்வி யொருவற்கு

____________________ மற்றை யவை.

(4×½=2 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தூண்டிற் புழுவினைப்போல் வெளியே
சுடர் விளக்கினைப்போல்
நீண்ட பொழுதாக எனது
நெஞ்சம் துடித்ததடீ
கூண்டுக் கிளியினைப்போல் தனிமை
கொண்டு மிகவும் நொந்தேன்;
வேண்டும் பொருளை யெல்லாம் மனது
வெறுத்து விட்டதடீ.

1. இப்பாடலைப் பாடியவர் யார்? 1 புள்ளி

____________________________________________

2. எவற்றையெல்லாம் மனம் வெறுத்தது எனக் கூறுகிறார்? 1 புள்ளி

____________________________________________

3. கவிஞர் நெஞ்சம் துடித்ததை எவற்றிற்கு ஒப்பிட்டுள்ளார்? 1 புள்ளி

____________________________________________

4. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

அ. பெயர் அடைமொழி ______________ இ. பெயரெச்சம் ______________

ஆ. தன்மை வினைமுற்று ______________ ஈ. வினையெச்சம் ______________

(4×½=2 புள்ளிகள்)

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. நானிலம்
2. தமிழர் புலப்பெயர்வு
3. நீர் கண்டு வியந்த இயற்கைக்காட்சி (7 புள்ளிகள்)

# பகுதி – 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மயில் ஒன்று தன் தோகையை விரித்து ஆடியது. தன் அழகை நினைத்துப் பார்த்துத் தற்பெருமை கொண்டது. அப்பொழுது காகம் ஒன்று அங்கு வந்தது. அதைப் பார்த்து மயில், “ஏ! காக்கையே! கன்னங்கரேலென்று எவ்வளவு அருவருப்பாக இருக்கிறாய்? என் தோகையைப் பார். எவ்வளவு அழகு'' என்று கேலி செய்தது. காகம் ஒன்றும் பேசவில்லை. இப்படியே ஒவ்வொரு பறவையாகக் கேலி செய்தது மயில். அங்கே கொக்கு ஒன்று வந்தது.

“ஏ! கொக்கே! வெள்ளை நிறம் ஒரு நிறமா? என் தோகையின் அழகைப் பார். வானவில்லைப் போல் வண்ணங்கள் இதில் உள்ளன. பார்த்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவ்வளவு அழகு'' என்றது மயில்.

இதைக் கேட்டுக் கோபம் கொண்ட கொக்கு. “ஏ! மயிலே! ஏன் வீண் பெருமை பேசுகிறாய்? உன் அழகான தோகையால் என்ன பயன்? என்னைப் போல் உன்னால் நீண்ட தூரம் பறக்க முடியுமா? என்றது. அதைக்கேட்ட மயில் முயன்று பார்த்தது. அதனால் அதிகதூரம் பறக்கமுடியவில்லை. இதைப்பார்த்த கொக்கு “இனிமேலாவது உன் இயல்பு அறிந்து அடங்கி நட” என்றது. வெட்கித் தலைகுனிந்த மயில் அங்கிருந்து சென்றது.

1. மயில் ஏன் தற்பெருமை கொண்டது? 1 புள்ளி

______________________________

2. மயில் எப் பறவைகளைக் கேலி செய்தது? 1 புள்ளி

______________________________

3. நீண்ட தூரம் பறக்கமுடியாத பறவை எது? 1 புள்ளி

______________________________

4. கொக்கு மயிலுக்கு கூறிய அறிவுரை என்ன? 1 புள்ளி

______________________________

5. மயிலின் தோகையில் இருக்கும் வண்ணங்கள் எதைப் போன்றது? 1 புள்ளி

______________________________

6. இவ்வுரைப் பகுதியிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

அ. அடுக்கிடுக்குத் தொடர் ______________

ஆ. சினைப்பெயர் ______________

இ. இடைச்சொல் ______________

ஈ. குணப்பெயர் ______________ (4×½=2 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

உலகில் மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர். பழங்கால மக்களால் பேசப்பட்ட பல மொழிகள் இன்று வழக்கில் இல்லை. குறிப்பிட்ட சில மொழிகளே இன்றுவரை பயன்பாட்டில் உள்ளன. அவற்றைத் தொன்மையான மொழிகள் எனக் கூறலாம். மிகத் தொன்மையான மொழிகளில் ஒன்றுதான் நம் தமிழ்மொழி. தமிழ்மொழி ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளது. தமிழ்மொழி மீது தமிழர்களுக்கு அளவற்ற பற்று உண்டு. தமிழர் தம் தாய்மொழியைக் குறிக்கும் பொழுதெல்லாம் ஓர் இனிய அடைமொழி கொடுத்தே கூறுவர். 'தேன்மொழி என்றும் தீந்தமிழ்' என்றும் கூறி அதன் இனிமையைப் புலப்படுத்துவர். 'பைந்தமிழ்' எனப் பெயரிட்டு அதன் இளமைத் தன்மையைச் சுட்டுவர். 'செந்தமிழ்' என அழைத்து அதன் செம்மையைக் குறிப்பர். நமது முன்னோர் தாம் பேசிய மொழிக்குத் தமிழ் எனப் பெயரிட்டனர். 'த' வல்லினத்தைச் சார்ந்தது. 'மி' மெல்லினத்தைச் சார்ந்தது. 'ழ்' இடையினத்தைச் சார்ந்தது. 'ழ' கர ஒலி பிறமொழிகளில் இல்லாத சிறப்பான ஒலி. இவ்வாறு மொழியின் பெயரே இனிமை என்னும் பொருள் தருவதாய்ச் சிறப்பாய் அமைந்துள்ளது.

(4 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத் தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியினைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.**

(4 புள்ளிகள்)

**Deutsch**

Kinderarbeit ist, wenn man Kinder in berufliche Tätigkeiten einsetzt. In vielen Ländern werden Kinder illegal in berufliche Tätigkeiten eingesetzt. In den entwickelten Ländern ist das Mindestalter für die Kinderarbeiter unterschiedlich. Das Kinderarbeitsgesetz der UN besagt, dass Kinder nur in Schulpflichten und Hauspflichten eingesetzt werden dürfen. In manchen Ländern werden heute Kinder in Fabriken, Tunneln, Ladenreihen oder Reinigungsarbeiten als Arbeitskräfte benutzt. Die heutige Entwicklung im Schulwesen und im Arbeitsmarkt hat das Nachdenken über die Kinderarbeit angeregt.

**Français**

Le travail des enfants représente le fait d'exploiter des enfants au travail. Dans de nombreux pays, des enfants sont illégalement employés. Dans les pays développés, les critères d'âge des enfants au travail varient. La loi sur le travail des enfants des Nations Unies dit que les enfants ne devraient pas être engagés dans d'autres sortes de travail que le travail à l'école ou à la maison. Aujourd'hui, dans certains pays, les enfants sont employés dans des usines, des mines, des magasins ou pour des travaux de nettoyage. L'évolution actuelle du système éducatif et du marché de l'emploi incite à la réflexion sur le travail des enfants.

**Italiano**

Il lavoro minorile rappresenta il coinvolgimento dei bambini nei lavori. In numerose nazioni i bambini vengono sfruttati illegalmente nel campo lavorativo. L'età minima di un bambino, dalla quale può cominciare a lavorare, varia di gran misura nei paesi sviluppati. Il diritto sui lavori minorili pubblicato dall' ONU dichiara che oltre ai lavori scolastici o casalinghi, è proibito far svolgere altre mansioni ai bambini. Oggigiorno in numerosi paesi, spesso i ragazzi eseguono dei lavori in fabbriche, miniere, mercati o delle mansioni di pulizie. L'attuale sistema educativo e il cambio nel sistema lavorativo fa riflettere sulle questioni riguardo al lavoro minorile.

இறுதிப்புள்ளிகள்

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |